# கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) சென்னை 600 035
# அவர்களின் செயல்முறை ஆணைகள்.
## முன்னிலை:திருமதி .சித்ரா ஜான் பெர்னான்டோ.,பி.எஸ்.சி., ஏ.சி.ஏ.,

**செ.மு.ந.க.எண்.36602/2017/எம்1**

நாள்:19.10.2020

| | | |
|---|---|---|
| பொருள்:– | | பணியமைப்பு – கருவூலக் கணக்குத் துறை – சென்னை ஓரலகு – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி.K.கீதா, இளநிலை உதவியாளர், சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்), சென்னை – பணிவரன்முறை – ஆணை வழங்கல் |
| படிக்கப்பட்டது:– | 1. | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை எண்.29280/2017/எம்1 நாள்: 30.08.2018 |
| | 2. | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் ந.க.எண்.29280/2017/எம்1 நாள்:23.09.2019 |
| | 3. | அரசாணை (3ப) எண்:17, நிதி (க.க.2)த் துறை, நாள்: 09.10.2020 |

*******

**ஆணை:–**

பார்வை மூன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வழங்கியுள்ள ஆணைகளின்படி கருவூலக் கணக்குத்துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் கடந்த 30.08.2018 முற்பகல் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட திருமதி.K.கீதா (காலஞ்சென்ற திரு.K.சுரேஷ், கண்காணிப்பாளர் அவர்களின் மனைவி) இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும் அப்பதவிக்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திருமதி.K.கீதா அவர்களின் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ல் பிரிவு 28–ன் உட்பிரிவு (1) –ன்படி தனியர் பணியேற்ற நாளான 30.08.2018 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

தனியரின் பணிவரன்முறை குறித்து உரிய பதிவுகள் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், 30.08.2018 முற்பகல் முதல் தனியரின் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளதால், பணிவிதிகளுக்குட்பட்டு ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதேனும் இருப்பின், அவற்றை விதிகளின்படி, பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

.....2

மேலும், தனியர் பணியேற்ற நாளான 30.08.2018 முற்பகல் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுப் பணிக்காலத்திற்கு தகுதிகாண்பருவத்தினராக கருதப்படுவார் என விளம்பி ஆணையிடப்படுகிறது.

மேற்காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி, தகுதிகாண் பருவகாலத்திற்குள் தகுதி பெற வேண்டிய பயிற்சி / துறைத் தேர்வுகளை உரிய காலகெடுவிற்க்குள் முடித்து தகுதி பெறும்படி திருமதி.K.கீதா, இளநிலை உதவியாளர், சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்), சென்னை அவர்கள் இதன் மூலம் பணிக்கப்படுகிறார்.

சித்ரா ஜான் பெர்னான்டோ
கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்)

பெறுநர்:

திருமதி.K.கீதா, இளநிலை உதவியாளர்,
சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்),
சென்னை
(உரிய வழிமுறையாக)

நகல்:

1. சம்பளக் கணக்கு அலுவலர், சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்), சென்னை
(தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.)
2. இருப்புக் கோப்பு

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

தே. சேவாப்பியா 19/10/2020
முதுநிலை கண்காணிப்பாளர்

19/10/2020